# <u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.</u>

முன்னிலை : திரு.P.ஆசைமருது, பி.ஏ., எல்.எல்.பி.,

நீதித்துறை நடுவர், தேனி.

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை.

<u>C.C. No. 24/2012</u>

**CNR No.TNTH020002102012**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆண்டு பட்டிகை வழக்கு எண் | : | 24/2012 |
| 2. | வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட எண் | : | 18.01.2012 |
| 3. | குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>மாவட்டக் குற்றப் பிரிவு,<br>தேனி. |
| 4. | குற்ற எண் மற்றும் சட்டப் பிரிவுகள் | : | குற்ற எண். 23/2007, சட்டப் பிரிவுகள் – 416, 419, 464, 471, 420 இதச. |
| 5. | குற்றம் சாட்டப்பட்டவர்கள் பெயர்,<br>வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி | : | A1 – ராஜா (வயது 23/2007),<br>த/பெ. நாராயணன்,<br>நடுத்தெரு,<br>கீழப்பூலாநந்தபுரம்,<br>சின்னமனூர் (Via),<br><br>A2 – பிரகாஷ் @ ஜெயப்பிரகாஷ் (25/2009),<br>த/பெ. மணி,<br>விநாயகர் கோவில் தெரு,<br>வெள்ளையம்மாள்புரம்,<br>உத்தமபாளையம்.<br><br>A3 – கண்ணன் (வயது 35/2009),<br>த/பெ. மாயத்தேவர், |

| | | | |
|---|---|---|---|
| | | | அய்யனார் காம்பவுண்ட்,<br>இந்திரா நகர்,<br>சின்னமனூர்.<br>**(Charge abated)** |
| 6. | சம்பவ தேதி | : | மார்ச், 2003 ம் வருடம் |
| 7. | புகார் அளிக்கப்பட்ட தேதி | : | 07.08.2007 |
| 8. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | 1 ம் எதிரி –22.12.2007<br>2 ம் எதிரி –25.11.2009<br>3 ம் எதிரி –Charge abated, dated 16.05.2018 |
| 9. | எதிரிகள் பிணையில் சென்ற நாள் | : | 1 ம் எதிரி –31.12.2007<br>2 ம் எதிரி –25.11.2009<br>3 ம் எதிரி –Charge abated, dated 16.05.2018 |
| 10. | எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | | 1 மற்றும் 2 எதிரிகள் மீது சட்டப் பிரிவுகள் 416, 419, 464, 471, 420 இதச–ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது. |
| 11. | எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | : | 1 மற்றும் 2 எதிரிகள் மீது சட்டப் பிரிவுகள் 416, 419, 464, 471, 420 இதச–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. |
| 12. | எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை |
| 13. | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 12.05.2015 |
| 14. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 07.10.2024 |
| 15. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 13.03.2026 |
| 16. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | 1 மற்றும் 2 எதிரிகள் மீது சட்டப் பிரிவுகள் 416, |

| | | | |
|---|---|---|---|
| | | | 419, 464, 471, 420 இதச–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பில் போதிய சாட்சிய, சான்றாவணங்களுடன் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. |
| 17. | தீர்ப்பும் தண்டனையும் | : | இறுதியாக, இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து, சட்டபிரிவுகள் 416, 419, 464, 471, 420 IPC–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.<br>3 வது எதிரி வழக்கு நிலுவையில் இருக்கும்போதே இறந்துவிட்டதால் அவர்மீதான குற்றம் அற்றுபோய்விட்டது.<br>இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே தனிப்பட்ட உத்தரவு எதுவும் இல்லை. |
| 18. | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்கப்பட்ட நாள் | : | இல்லை. |
| 19. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை. |

இவ்வழக்கானது கடந்த 29.04.2009 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஆன்டிபட்டியில் CC.No.125/2009 எனக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு மாண்புமிகு குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் கடிதம் 947, தேதி 23.06.2011 ல் பிறப்பித்த செயல்முறை ஆணையின்படி மேற்படி வழக்கானது கடந்த 18.01.2012–ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், 1 வது எதிரி தரப்பில் கற்றறிந்த

வழக்கறிஞர் திரு.S.ராமராஜ் அவர்கள் ஆஜராகியும், 2 வது எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ராமராஜ் அவர்கள் ஆஜராகியும், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இறுதியாக இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த, இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் . . . . .

## தீர்ப்புரை

1) இவ்வழக்கின் 1ம் எதிரி ராஜா, (வயது 23/2007), த/பெ.நாராயணன் என்பவர் 8–ம் வகுப்பு வரை படித்து தேர்ச்சி பெற்றும், தான் மேலும் நேரடியாக 10–ம் வகுப்பு படித்து தேர்ச்சி பெறவேண்டும் எனக்கருதி, 3–வது எதிரி கண்ணன் என்பவர் சின்னமனூரில் நடத்திவந்த KTC டுடோரியல் காலேஜ்ஜில் படித்து மார்ச்–2003ம் வருடத்தில் 10–ம் வகுப்பு (S.S.L.C.) தனித்தேர்வு ஐந்து பாடங்களுக்கும் எழுத விண்ணப்பிக்கும்போது, தான் ஐந்து பாடங்களும் எழுதி தேர்ச்சி பெற முடியாது என நினைத்து, 3 வது எதிரி மூலம், 2 வது எதிரி பிரகாஷ் @ ஜெயபிரகாஷ் என்பவரை வைத்து எழுத நினைத்து விண்ணப்ப படிவத்தில் 1வது எதிரியின் பெயர் மற்றும் தகப்பனார் பெயரை எழுதி ஆள்மாறாட்டம் செய்து, மஞ்சளார் அணை விலாசத்தை எழுதி, விண்ணப்ப படிவத்திலும், படிவத்தில் இணைக்கும் மற்ற சான்றுகளிலும் சான்றொப்பம் செய்ய போலி முத்திரை தயார் செய்தும், போலியாக கையெழுத்திட்டும் ஆள்மாறாட்டத்தின் மூலம் ஏமாற்றும் நோக்கத்தில், ஆள்மாறாட்டம் செய்தும், பொய்யான ஆவணம் தயாரித்து, அந்த ஆவணத்தை வைத்து அரசு அதிகாரிகளை நம்ப வைத்தும் ஏமாற்றி தேர்வு எழுதிய குற்றத்திற்காக, 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மீது சட்டப் பிரிவுகள் 416, 419, 464, 471, 420 இதச–வின் கீழ் தேனி, மாவட்டக் குற்றப் பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கை நீதிமன்றம் கோப்பிற்கு எடுத்துக்கொண்டபின்னர், இவ்வழக்கின் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, பின்னர் எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானதும், இவ்வழக்குக் கோப்புக்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு

207–ன் கீழ் இலவசமாக எதிரிகளுக்கு வழங்கப்பட்டும், பின்னர் எதிரிகளுக்குப் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டத்தில் எதிரிகள் குற்றம் புரிந்திருப்பதற்கான முகாந்திரம் இருப்பதாகத் தோன்றியதால், 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மீது சட்டப் பிரிவுகள் 416, 419, 464, 471, 420 இதச–வின் கீழ் தனித்தனியாக குற்றச்சாட்டுக்கள் வனைந்து, அவைகளை தமிழில் விளக்கி வினவிய போது, எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்றும், குற்றச்சாட்டுக்களை மறுத்து வழக்கு விசாரணை வேண்டினார்கள்.

3) எதிரிகள் குற்றத்தை மறுத்ததால் அரசுத் தரப்பில் சாட்சிகள் விசாரிக்க உத்தரவிடப்பட்டு, சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, அரசு தரப்பில், அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கின் 3 வது எதிரியான கண்ணன் @ செந்தாமரைக் கண்ணன், த/பெ.மாயத்தேவர் என்பவர் இவ்வழக்கு விசாரணையின்போது, கடந்த 16.05.2018–ம் தேதி இறந்துவிட்டார். அவரின் இறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் அற்றுப்போனதாகக் கருதி கடந்த 06.09.2018–ம் தேதி முடிக்கப்பட்டது.

**<u>5) அரசுத் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் புலனாகும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் :</u>**

(i) அ.சா.1 மோகன் என்பவர் அவரது சாட்சியத்தில், தான் தற்பொழுது சென்னையில் குடியிருந்து வருவதாகவும், தான் மதுரையில் உள்ள அரசுத் தேர்வுகள் மண்டல துணை இயக்குனராக பணிபுரிந்து, தற்பொழுது ஓய்வுபெற்றுவிட்டதாகவும், ஆஜர் எதிரிகளைத் தனக்குத் தெரியாது என்றும், கடந்த 2006–2007 வரை தான் மதுரை அரசுத் தேர்வுகள் மண்ட துணை இயக்குனராக தான் பணிபுரிந்தபொழுது ராஜா என்பவர் 2003–ல் SSLC இடைநிலைத் தேர்வு எழுத விண்ணப்பித்திருந்ததாகவும், அதில் அவர் இணைந்திருந்த பள்ளிச் சான்றிதழும், அவர் சான்று உறுதி வாங்கின சான்றும் சந்தேகத்திற்குரியதாக இருந்ததால் சேலம் மாவட்டம் ஏ.என்.மங்களம்

சென்மேரிஸ் மேல் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் கையொப்பம் போட்டதுபோல் இருந்ததில் அவர்தான் போட்டாரா என்று அவரிடம் கேட்டதாகவும், ராஜா என்பவர் தனது விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிய இந்து நடுநிலைப் பள்ளி சீலயம்பட்டி பள்ளியின் ரெக்கார் சீட்டும், அவரின் புகைப்படத்தையும் அந்த பள்ளிக்கு அனுப்பி புகைப்படத்தில் உள்ளவர்கள் ஒன்றுதானா என்று அனுப்பியதாகவும், அதற்கு சீலையம்பட்டி தலைமை ஆசிரியர் ராஜா என்பவர் கொடுத்தது உண்மைதான் என்றும், ஆனால் போட்டோவில் உள்ள ராஜா இல்லை என்றும், எனவே, இது போலி என்று தனக்கு கடிதம் அனுப்பியிருந்ததாகவும், சேலம் ஜெயமங்கலம் சென்மேரிஸ் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் 25.06.2003 நாளிட்ட அவருடைய கடிதத்தில் ராஜாவின் புகைப்படத்தில் கையொப்பம் செய்தது தான் இல்லை என்றும், முத்திரையும் தாங்கள் வைத்தது இல்லை என்று தெரிவித்ததாகவும், பின்பு அந்த ஆவணங்களை தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுககொண்டதாகவும், தான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 என்றும், 25.06.2003 ம் தேதியிட்ட சேலம் மாவட்டம் ஏ.ம்.மங்கலம் புனித மேரிஸ் மேல் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் கடிதம் அ.சா.ஆ.2 என்றும், எதிரியின் 21.01.2004 ம் தேதியிட்ட எதிரியின் புகைப்படத்துடன்கூடிய சீலையம்பட்டி இந்து தலைமை ஆசிரியர் அவர்களின் கடிதம் அ.சா.ஆ.3 என்றும், 08.01.2003–ம் தேதியிட்ட மார்ச் 2003–ம் வருடத்திற்குரிய பணித்தேர்வு எழுவதற்கான புகைப்படத்துடன்கூடிய விண்ணப்பம் அ.சா.ஆ.4 என்றும், 12.08.2003–ம் தேதியிட்ட செப்டம்பர் 2003 ம் வருடத்திற்குரிய எதிரியின் புகைப்படம் ஒட்டப்பட்ட தனித்தேர்வு எழுதுவதற்குரிய நுழைவுச்சீட்டு அ.சா.ஆ.5 என்றும், 12.08.2003–ம் தேதியிட்ட கோட்டூர் அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரால் சான்றொப்பம் செய்யப்பட்டது அ.சா.ஆ.6 என்றும், சேலம் புனித மேரிஸ் தலைமை ஆசிரியரால் சான்றொப்பம் செய்யப்பட்ட எதிரியின் 8–ம் வகுப்பு வரையிலான ரெக்காட்ஸ் சீட் அ.சா.ஆ.7 என்றும், கோட்டூர் ஆசிரியரால் சான்றொப்பம் செய்யப்பட்ட எதிரியின் 8–ம் வகுப்புரையிலான ரெக்காட்ஸ் சீட் அ.சா.ஆ 8 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) அ.சா.2 சோமசுந்தரபாண்டியன் என்பவர் தனது சாட்சியத்தில், தான்

சின்னமனூரில் குடியிருந்து வருவதாகவும், சீலையம்பட்டி இந்து நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருவதாகவும், 2001–2002 ஆண்டுகளில் என்.ராஜா என்பவர் 8–ம் வகுப்பு தேர்வு பெற்றதாக சர்டிபிகேட் வழங்கியதாகவும், தேர்வுத் துறை மதுரை மண்டலத்திலிருந்து தன்னுடைய பள்ளிக்கு 2003 செப்டம்பரில் ராஜா என்பவர் தேர்வு எழுதியதாக வந்ததில் தான் வழங்கிய மாற்று சான்றிதழின் எண்.3014, போட்டோ ஒட்டிய புகைப்படத்துடன் தனக்கு அனுப்பி இருந்ததாகவும், அந்த மாற்று சான்றிதழில் உள்ள புகைப்படம் வேறொரு மாணவனின் புகைப்படமாக இருந்ததாகவும், ராஜா என்ற மாணவனை நேரடியாக விசாரணை செய்து உண்மையான மாணவனான ராஜா என்பவரின் போட்டோ என்றும், தான் விசாரணை செய்த மனுவில் ஒட்டி இம்மாணவன் தான் தங்களிடம் பயின்ற மாணவன் என்றும் தேர்வாணையம் அனுப்பிய விண்ணப்பத்தில் இருந்த மாணவன் வேறொரு மாணவன் என்று தேர்வு ஆணையம் மதுரை மண்டலத்திற்கு தான் அனுப்பியதாகவும், போலிசார் தன்னை விசாரித்ததாகவும், தான் வழங்கிய சான்று ஏற்கனவே அ.சா.1 மூலம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(iii) அ.சா.3 தியாகராஜன் என்பவர் தனது சாட்சியத்தில், தான் சின்னமனூரில் குடியிருந்து வருவதாகவும், தான் அரசு மேல்நிலைப் பள்ளி குச்சனூரில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து தற்போது ஓய்பு பெற்றுவிட்டதாகவும், ராஜா என்பவரை தனக்குத் தெரியும் என்றும், 1991 முதல் 2004 வரை கோட்டுர் அரசு மேல்நிலைப் பள்ளியில் முதுநிலை கணித ஆசிரியராக பணிபுரிந்தபோது, 2003–ம் ஆண்டு தலைமை ஆசிரியர் மாறுதலாகி சென்றபோது, தான் தலைமை ஆசிரியராக (பொறுப்பு) பணிசெய்து கொண்டிருந்ததாகவும், அக்காலத்தில் மாணவர்கள் நலன் கருதி தேர்வு எழுதுவதற்காக அரசு விதிப்படி ஜெராக்ஸ் நகல்களில் உண்மை சான்றிதழ்களை சரிபார்த்து சான்றொப்பம் செய்துள்ளதாகவும், இதேபோல் தங்களின் விசாரணையில் உள்ள என்.ராஜா என்ற மாணவனின் 8–ம் வகுப்பு மார்க் சீட்டிலும் தோல்வி அடைந்த 10–ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழிலும் சான்றொப்பம் இட்டது தான்தான் என்று உறுதி கூறுவதாகவும், போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(iv) அ.சா.4 குணசேகரன் என்பவர் தனது சாட்சியத்தில், தான் சின்னமனூரில்

குடியிருந்துவருவதாகவும், தான் சின்னமனூர் கிராம நிர்வாக அலுவலரிடம் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், ராஜா என்பவரை தெரியும் என்றும், கடந்த 22.12.2007–ம் தேதி காலை 7.30 மணிக்கு தானும் தன்னுடன் பணிபுரியும் கிராம உதவியாளர் ராமசாமி என்பவரும் அலுவலக நிமித்தமாக பஸ் ஏறுவதற்காக சீலையம்பட்டி பஸ் நிலையம் சென்றபோது அங்கு மாவட்ட குற்றப் பிரிவு சிறப்பு சார்பு ஆய்வாளர் கீழபூலானந்தபுரத்தை சேர்ந்த நாராயணன் மகன் ராஜா என்பவரை கைது செய்து வைத்திருந்ததாகவும், அப்போது போலிசார் கேட்டதற்கிணங்க தானும், ராமசாமியும் போலிசாரிடம் சென்றதாகவும், அப்போது ராஜாவை பார்த்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்க வேண்டியுள்ளதாகவும், தங்கள் முன்னால் வாங்க வேண்டும் என்று கூறி சிறப்பு சார்பு ஆய்வாளர், ராஜா என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியதாகவும், அதில் ராஜா என்பவர் தன் சொந்த ஊர் கீழபூலானந்தபுரம் என்றும், தான் புதினா, கருவேப்பிலை வியாபாரம் செய்து வருவதாகவும், தனக்கு திருமணம் ஆகவில்லை என்றும், தான் சீலையம்பட்டியில் உள்ள நடுநிலைப் பள்ளியில் 8–ம் வகுப்பு வரை படித்து பாஸ் செய்துள்ளதாகவும், இடையில் 2 வருடம் படிக்காமல் 10–ம் வகுப்பு நேரடியாக சென்று படிக்க வேண்டி சின்னமனூரில் உள்ள கே.டி.சி. டுடோரியல் தனியார் காலேஜில் சேர்ந்தேன் என்றும், அதனை கண்ணன் எனபவர் நடத்தினார் என்றும், அங்கு 5 பாடங்களில் தேர்ச்சி பெற 2000 ரூபாய் பணம் கொடுத்தால் தேர்ச்சி பெற்று விடலாம் என்று கண்ணன் கூறியதாகவும், அதன் பிறகு பரிட்சை முடிந்ததும் ராஜா என்பவரிடம் கண்ணன் யாராவது வைத்து தான் 10–ம் வகுப்பு பாஸ் பண்ணி தந்து விடுகிறேன் என்றும், அதன் பின்பு பரிட்சை முடிந்ததும் 5 பாடங்களில் 2 பாடங்களில் தேர்ச்சி பெற்றதற்கான பட்டியலை கண்ணன் என்பவர் ராஜா என்பவரிடம் கொடுத்தார் என்றும், மீதமுள்ள பாடங்களை தானே தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுத் தருவதாகவும், தனியாக வந்து ஒரு பாடத்தில் தேர்ச்சி பெற்றதாகவும், மீதமுள்ள பாடங்களில் ஹால் டிக்கெட் கிடைக்காததால் தேர்ச்சி பெற முடியவில்லை என்றும், அதன் பின்பு ராஜா என்பவரை இந்து நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர் அழைத்து நீ எப்படி பரிட்சை எழுதி பாஸ் பண்ணிணாய் என்று கேட்டதற்கு டுடோரியல் காலேஜில் வேறொரு நபரை வைத்து தேர்வு எழுதி தான் தேர்ச்சி பெற்றதாகவும், யாரை வைத்து தேர்வு

எழுதினார்கள் என்ற விபரம் தனக்கு தெரியாது என்றும் கூறியதாகவும், அதன்பிறகு ராஜா என்பவர் தன்னுடைய வீட்டிற்கு அழைத்து சென்று 2 மார்க் சீட்டுகளை எடுத்து சி.சார்பு ஆய்வாளரிடம் கொடுத்தாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ராஜா என்பவர் கையெழுத்து செய்ததாகவும், தானும் ராமசாமியும் சாட்சி கையெழுத்துப் போட்டதாகவும், போலிசார் தன்னை விசாரித்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.9 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(v) அ.சா.5 கே.ஜே.வர்கீஸ் என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது பெங்களுரில் குடியிருந்து தலைமை ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும், அ.சா.1 ஐ தெரியாது என்றும், ஆஜர் எதிரியை தனக்குத் தெரியாது என்றும், 2, 3 எதிரிகளையும் தனக்குத் தெரியாது என்றும், 2003–ஜனவரி முடிவில் ஒரு வாரம் மெடிக்கல் லீவில் இருந்ததாகவும், 2003 வருடம் தான் சம்பவம் நடந்ததாகவும், மே மாதம் 25ம் தேதி வரை தான் மேல்அதிகாரியின் அனுமதியுடன் பிரான்ஸ் சென்றிருந்ததாகவும், அந்த நேரத்தில் பொறுப்பில் இருந்த தலைமை ஆசிரியர் பதில் அனுப்பியயிருந்ததாகவும், தான் மீண்டும் பணிக்கு திரும்பியபோது மண்டல இயக்குநருக்கு ஆவணங்களை பார்த்து தான் பதில் அனுப்பியதாகவும், ஆனால் அதில் இரண்டு முக்கியமான விசயங்கள் இருந்ததாகவும், ஒன்று தங்கள் பள்ளியின் முத்திரை இல்லை என்றும், அந்த சீலில் எழுத்து பிழை இருந்ததாகவும், மேலும் அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும், எதிரி விண்ணப்பித்த விண்ணப்ப படிவத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும், எதிரி விண்ணப்பித்த விண்ணப்ப படிவத்தில் உள்ள கையெழுத்து மற்றும் முத்திரையும் வேறுபாடு உள்ளதாகவும், இது பற்றி தான் மண்டல இயக்குநருக்கு அனைத்து தகவல்களையும் தெரியப்படுத்தியதாகவும், அதன்பின்பு தனக்கு எந்த தகலும் இல்லை என்றும், தான் மாறுதலாகி சென்றுவிட்டதாகவும், அது சம்பந்தமாக தன்னை அப்போது போலிசார் விசாரித்ததாகவும், நடந்த விபரங்களைக் கூறியதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(vi) அ.சா.6 மகேஷ் (எ) மகேஷ்வரன் என்பவர் தனது சாட்சியத்தில், தான் வெள்ளையம்மாமள்புரத்தில் வசிப்பதாகவும், தான் திருப்பூரில் தனியார் பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியராக பணியாற்றி வருவதாகவும், எதிரிகளைத் தனக்குத் தெரியாது

என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்று கூறி, பிறழ் சாட்சியமாக மாறி சாட்சியமளித்துள்ளார்.

(vii) அ.சா.7 சிவகுமார் என்பவர் தனது சாட்சியத்தில், தான் சின்னமனூரில் குடியிருப்பதாகவும், தான் ஓட்டுநராக தொழில் செய்துவருவதாகவும், 3–ம் எதிரியை தனக்குத் தெரியும் என்றும், 3–ம் எதிரி சின்னமனூர் காயத்திரி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்ததாகவும், தனக்குச் சொந்தமான வீட்டில் 3ம் எதிரி வாடகைக்கு குடியிருந்து வந்ததாகவும், போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(viii) அ.சா.8 சேகர் என்பவர் தனது சாட்சியத்தில், தான் வெள்ளையம்மாள்புரத்தில் குடியிருப்பதாகவும், தான் விவசாயம் செய்துவருவதாகவும், 2ம் எதிரியை தனக்குத் தெரியாது என்றும், தான் அவரை இதற்கு முன்பு பார்த்ததில்லை என்றும், போலிசார் தன்னை விசாரித்ததாகவும், தனக்கு தெரியாது என்றுதான் தான் சொன்னதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(ix) அ.சா.9 அங்குசாமி என்பவர் தனது சாட்சியத்தில், தான் ஆண்டிபட்டியில் வசிப்பதாகவும், 2009–ல் காவல் சார்பாய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டதாகவும், தான் கடந்த 7.8.2007–ல் தேனி மாவட்ட குற்றப் பிரிவில் சார்பாய்வாளராக பணிபுரிந்தபோது, நிலையக் குற்ற எண். 23/2007, இதச பிரிவுகள் 416, 464, 471, 420 வழக்கில் மேல் படி தேதியில் அரசுத் தேர்லவுகள் மண்டல துணை இயக்குநர் மோகன் அனுப்பி வைத்த புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், அது அ.சா.ஆ.10 என்றும், தான் முதல் விசாரணை மேற்கொண்டதாகவும், வழக்கின் சாட்சிகள் மோகன், சோமசுந்தர பாண்டியன், ராமராஜன், வக்கீஸ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் உண்மை என்று கூறப்பட்டதால் எதிரிகள் 1ம் எதிரி ராஜா என்பவரை 22.12.2007–ல் காலை 7.30 மணிக்கு சீலையம்பட்டி பஸ்டாப்பில் வைத்து காரணம்கூறி கைது செய்ததாகவும், அதே இடத்தில் வைத்து எதிரி தானாக முன்வந்து வைத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் குணசேகரன், ராமசாமி ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்ததாகவும், 1–ம் எதிரி ஒப்படைத்த 10–ம் வகுப்பு போலி மதிப்பீடு சான்றிதழை

பார்வை மகஜரில் கைப்பற்றியதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள் குணசேகரன், ராமசாமி ஆகியோர்களிடம் சாட்சிக் கையெழுத்து வாங்கியதாகவும், பின்னர் எதிரியை நிலையம் கொண்டு வந்து கைது வழி காவலர்களிடம் மூலம் நீதிமன்ற காவலுக்கு அன்றைய தினமே அனுப்பி வைத்தாகவும், வழக்கின் ஆவணங்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்தாகவும், 14.1.2008–ல் விசாரணையை முடித்து மேல்விசாரணைக்கு ஆய்வாளர் காவலுக்கு வழக்கு கோப்பை ஒப்படைத்ததாகவும், ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(x) அ.சா.10 சேது என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது மதுரையில் குடியிருந்து வருவதாகவும், கடைசியாக திருநெல்வேலி மாவட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்துவிட்டு, தற்போது பணி ஓய்வில் இருந்து வருவதாகவும், கடந்த 10.12.2008–ம் தேதி தேனி மாவட்ட குற்றப் பிரிவு ஆய்வாளராக பணியாற்றியபோது தேனி மாவட்ட குற்றப் பிரிவு குற்ற எண். 23/2007, சட்டப் பிரிவுகள் 416, 419, 464, 471, 420 இதச வழக்கின் கோப்பினை பார்வையிட்டு தன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டதாகவும், 09.01.2009–ம் தேதி இவ்வழக்கு சம்பந்தமாக சாட்சிகள் 1) மோமகன், 2) சுந்தரபாண்டியன், 3) தியாகராஜன், 4) குணசேகரன், 5) ராமசாமி, 6) வர்கீஸ் ஆகியோர்களை விசாரணை செய்தபோது ஏற்கனவே இவ்வழக்கை விசாரணை செய்த விசாரணை அதிகாரிகளிடம் கூறியதுபோல் தனது விசாரணையிலும் கூறியதால் தான் அவர்களது வாக்குமூலத்தை தனியாக வாக்குமூலமாக பதிவு செய்யவில்லை என்றும், கடந்த 13.03.2009–ம் தேதி சாட்சி பரதன் தேவதானப்பட்டி கிராம நிர்வாக அலுவலர், அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், கடந்த 02.04.2009–ம் தேதி சாட்சிகள் 1) சிவக்குமார், 2) மகேஸன், 3) சேகர் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்ததாகவும், 18.04.2009–ம் தேதி வழக்கு சம்பந்தமாக ஆவசணங்களை சரிபார்த்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் எதிரிகள் மீது இதச 416, 419, 464, 471, 420 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், மார்ச் 2003–ம் வருடத்திய எதிரியின் மதிப்பெண் பட்டியல் No.0435168 என்றும், அது அ.சா.ஆ.11 என்றும், செப்டம்பர் 2003 ம் வருடத்திய எதிரியின் மதிப்பெண் பட்டியல் No.

0867776 என்றும், அது அ.சா.ஆ.12 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.**

6) இவ்வழக்கின் எதிரிகளுக்குப் பாதகமாக தோன்றும் அரசு சாட்சியங்களை தொகுத்து கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ)–ன் கீழ் எதிரிகளிடம் எடுத்துரைத்து வினவியபோது, எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் எனவும், தங்கள் மீதான வழக்கு பொய் வழக்கு என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியதன் பேரில் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7) வாதுரைகள்:**

**அரசு தரப்பு வாதம்:**

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது, அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சியங்களின்படியும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான ஆவணங்களின்படியும், எதிரி மீதான அரசு தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யயப்பட்டுள்ளது எனவும், எனவே, எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

**எதிரி தரப்பு வாதம்:**

கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர்கள், 1வது எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையை எழுத்து பூர்வமான வாதுரையாக சமர்பித்து அரசு தரப்பிலிருந்து எதிரிகள் மீதான குற்றத்தை முறையாக மெய்பிக்கப்படவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கான விளக்கத்தை குறித்து அரசு தரப்பில் எடுத்துக் கூறவில்லை என்றும், எனவே எதிரியை விடுதலை செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு வாதுரை முன்னிலைப்படுத்தப்பட்டது.

8) இரு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்கு

கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. **இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டி பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?** என்பதே ஆகும்.

**9) தீர்வும், தீர்வுக்கான காரணங்களும்:-**

அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:

(i) இருதரப்பு வாதுரைகளை கேட்டும் ஆவணங்களை பரிசீலித்தும் பார்த்ததில், இவ்வழக்கின் 1-ம் எதிரி ராஜா, (குற்ற இறுதியறிக்கையின்படி, வயது 23/2007), த/பெ.நாராயணன் என்பவர் 8-ம் வகுப்பு வரை படித்து தேர்ச்சி பெற்று, அவர் மேலும் நேரடியாக 10ம் வகுப்பு படித்து தேர்ச்சி பெறவேண்டும் என்று கருதி, 3வது எதிரி கண்ணன் என்பவர் சின்னமனூரில் நடத்திவந்த KTC டுடோரியல் காலேஜ்ஜில், படித்து மார்ச்-2003ம் வருடத்தில் 10-ம் வகுப்பு (S.S.L.C.) தனித்தேர்வை ஐந்து பாடங்களுக்கும் எழுத விண்ணப்பிக்கும்போது, அவர் ஐந்து பாடங்களும் எழுதி தேர்ச்சி பெற முடியாது என நினைத்து, 3வது எதிரி மூலம், 2வது எதிரி பிரகாஷ் @ ஜெயபிரகாஷ் என்பவரை வைத்து எழுத நினைத்து விண்ணப்ப படிவத்தில் 1வது எதிரியின் பெயர் மற்றும் தகப்பனார் பெயரை எழுதி மேலும் மஞ்சளார் அணை விலாசத்தை எழுதி, ஆள்மாறாட்டம் செய்து, விண்ணப்ப படிவத்திலும், அதனுடன் இணைக்கும் மற்ற சான்றுகளிலும் சான்றொப்பம் செய்ய போலி முத்திரை தயார் செய்தும், போலியாக கையெழுத்திட்டும், ஆள்மாறாட்டத்தின் மூலம் ஏமாற்றும் நோக்கத்தில், பொய்யான ஆவணம் தயாரித்து, அதை வைத்து அரசு அதிகாரிகளை நம்ப வைத்தும், ஏமாற்றி தேர்வு எழுதி குற்றம்புரிந்ததாக, 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மீது சட்டப் பிரிவுகள் 416, 419, 464, 471, 420 இ.த.ச-வின் கீழ் தேனி, மாவட்டக் குற்றப் பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வழக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது.

(ii) இவ்வழக்கில் 1 வது எதிரி கடந்த மார்ச் 2003, பொது தேர்வில் 3 வது எதிரியின் உதவியோடு 2 வது எதிரி மூலம் போலியான ஆவணங்களை தயார் செய்து ஆள்மாறட்டம் செய்து தேர்வு எழுதியதாக எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 416, 417, 464, 471, 420 ஆகிய பிரிவுகளின் கீழ் அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

(iii) இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.1 தனது முதல் விசாரணையில் தான் மதுரையில் மண்டல இயக்குனராக பணி புரிந்த போது 1 வது எதிரி கொடுத்த விண்ணப்பத்தில் சந்தேகம் இருப்பதாகக் கூறி 1 வது எதிரி சமர்ப்பித்த ஆவணங்களை சீலையம்பட்டி அரசு பள்ளிக்கு அனுப்பியும் மற்றும் சேலம், ஜெயமங்களத்தில் உள்ள சென்மேரிஸ் மேல்நிலைப் பள்ளிக்கு அனுப்பியும் 1 வது எதிரி கொடுத்த விண்ணப்பங்களின் உண்மை தன்மையை பற்றி கேட்டு கடிதம் அனுப்பியதாகவும், மேற்படி சேலம், ஜெயமங்களம், சென்மேரிஸ் பள்ளி தாளாளர், அவரது கடிதத்தில் அவரது பள்ளியின் முத்திரையும் அவரது கையெழுத்தும் போலியாக உள்ளதாக தெரிவித்துள்ளார் என்றும் மற்றும் சீலையம்பட்டி அரசு பள்ளியின் தலைமை ஆசிரியர் 1 வது எதிரிக்கு கொடுத்த ரெக்காட்டு சீட்டும், தங்களது பள்ளியில் வழங்கப்பட்டது தான் என்றும், ஆனால் விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ள புகைப்படத்திலுள்ள நபர் தங்களது பள்ளியில் படித்த ராஜா இல்லை என்றும் கூறி கடிதம் அனுப்பியதாகவும், எனவே, 2003 ம் ஆண்டு பொது தேர்வில் 1 வது எதிரி ஆள்மாறட்டம் செய்துள்ளார் என்று அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார்.

(iv) இவ்வழக்கில் மேற்படி சாட்சி தனது குறுக்கு விசாரணையில், என் அலுவலகத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட பணி என்ன என்றால் எஸ்எஸ்எல்சி தேர்விற்கு வரும் விண்ணப்பங்களை பரிசீலித்து அனுமதிப்பதும் நிராகரிப்பதும் தான். 1 ம் எதிரி ராஜா என்பருக்கு வழங்கப்பட்ட மதிபெண்பட்டியல் அரசால் வழங்க்பபட்டது என்றால் பார்ப்பதற்கு அரசால் வழங்கப்பட்டது போல் உள்ளது அது அரசால் வழங்கப்பட்டதா என்று தெரியாது, பொதுவாக ஒரு விண்ணப்பம் கொடுக்கப்படும் போது அது முழுமையாக பரிசிலனை செய்த பின்பு தான் ஏற்றுக்கொண்டதன் பேரில் தான் பரிட்சை எழுத அனுமதிக்கப்படுவான் என்றால் சரிதான். சீலையம்பட்டி பள்ளிக்கும் சேலம் பள்ளிக்கும் நான் ஒரு கடிதம் அனுப்பியதாக சொல்லப்பட்ட நகலை நான் இந்த

வழக்கில் தாக்கல் செய்யபடவில்லை என்றால் சரிதான். சீலையம்பட்டி பள்ளியில் யாரை விசாரித்தால் போட்டோ எப்படி கிடைக்கப்பட்டது எனவும் அவரை நான் நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான், அவரால் எப்படி பெறப்பட்டது என்றும் தெரியாது.

(v) மேற்படி அ.சா.1 தனது புகாரில் சொல்லியுள்ள சீலையம்பட்டி மற்றும் சேலம் சென்மேரிஸ் பள்ளிக்கு அனுப்பிப் பெறப்பட்ட கடிதங்களை இந்த வழக்கில் ஆவணங்களோடு இணைத்து தாக்கல் செய்யவில்லை. எனவே, அ.சா.1 அனுப்பிய கடிதத்தின் வாயிலாக பெறப்பட்டதாக சொல்லும் அ.சா.ஆ.2 மற்றும் 3 ஆகிய ஆவணங்களின் மீது சந்தேகம் எழுகின்றது. மேலும், அவர் தனது சாட்சியத்தில் 1வது எதிரி சென்மேரிஸ் பள்ளியின் தாளாளரின் கையொப்பம் மற்றும் முத்திரை ஆகியவற்றை போலியாக தயார் செய்து விண்ணப்பங்கள் சமர்பித்துள்ளார் என்று கூறும் நிலையில் சென்மேரிஸ் பள்ளியின் உண்மையான கையொப்பம் மற்றும் முத்திரைகளை கைப்பற்றி புலன் விசாரணை அதிகாரிகள் ஒப்படைக்கவில்லை என தெளிவாகிறது.

(vi) மேலும் புகாரில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில், என் பள்ளியில் இருந்து மதிப்பெண் பட்டியல் மற்றும் டிசியில் புகைப்படம் வராது என்றால் அந்த சமயத்தில் எதுவும் வராது. எங்கள் பள்ளி ஆவணங்களிலும் எங்களிடம் படித்த பள்ளி மாணவர்களின் புகைப்படம் இல்லை என்றால் சரிதான். மண்டல அலுவலகத்தில் இருந்து வந்த ஆவணத்தில் போட்டோ ஒட்டியது வேறு ஒரு நபரின் புகைப்படம் என நான் போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2 இவ்வாறு சாட்சியமளித்துள்ள நிலையில் அ.சா.1 அனுப்பிய கடிதத்தை பார்த்து 1வது எதிரி ஆள்மாறட்டம் செய்துள்ளார் என 2வது சாட்சி கூறியுள்ளது ஏற்கும்படியாக இல்லை. குறிப்பாக அந்த காலக்கட்டத்தில் தங்களது பள்ளியில் மாணவர்களின் புகைப்படங்கள் வைத்து பராமரிக்கவில்லை என்று கூறும் நிலையில் 2வது சாட்சியம் எவ்வாறு அந்த முடிவுக்கு வந்தார் என்று அரசு தரப்பில் தெளிவுப்பட எடுத்துக் கூறவில்லை.

(vii) மேலும் அ.சா.5 அனுப்பியதாக அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.2

ஆவணத்தை சென்மேரிஸ் பள்ளியின் தாளாளரர் தங்களது பள்ளியில் உள்ள அச்சு பகர்ப்பு ஆவணங்களோடு அ.சா.ஆ.4 ஆவணத்தை ஒப்பிட்டுப் பார்த்ததில் மேற்படி ஆவணத்தில் உள்ள கையொழுத்து மற்றும் அச்சு தங்களது பள்ளிக்கு உரியது அல்ல என்று கூறும் நிலையில் மேற்படி அச்சு பகர்ப்பு ஆவணத்தை இணைத்து கடிதம் அனுப்பவில்லை. மேற்படி அச்சு பகர்ப்பு நகலை புலன் விசாரணை அதிகாரி பெற்று அதனை அ.சா.ஆ.4 ஆவணத்தோடு ஒப்பீடு செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(viii) மேலும் 1 வது எதிரி சேலம், ஜெயமங்களம், சென்மேரிஸ் பள்ளியின் தாளாளர் கையொப்பம் மற்றும் அந்த பள்ளியின் அச்சை மோசடியாக பயன்படுத்தி விண்ணப்பம் செய்துள்ளார் என்று அரசு தரப்பில் கூறும் நிலையில் அவ்வாறு அவர் பதிவு செய்து விண்ணபத்தையோ அல்லது சேலம், ஜெயமங்களம், சென்மேரிஸ் பள்ளியின் தாளாளரின் கையொப்பம் மற்றும் அச்சுக்களை உரிய முறையில் கைப்பற்றி அதனை தட அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அறிக்கைப் பெற அரசு தரப்பிலிருந்து எவ்வித முயற்சியும் செய்யவில்லை. எனவே, 1 வது எதிரி சேலம், ஜெயமங்களம், சென்மேரிஸ் பள்ளிசேலம், ஜெயமங்களம், சென்மேரிஸ் பள்ளியின் தாளாளர் கையொப்பம் மற்றும் அச்சினை மோசடியாக பயன்படுத்தியுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டை அரசு தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் அப்பாற்பட்டு மெய்பிக்கப்படவில்லை என்றே கருதுகிறது.

(ix) 2 வது எதிரி 1 வது எதிரிக்கு பதிலாக ஆள்மாறட்டம் செய்து தேர்வு எழுதியுள்ளார் என்று அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. 2 வது எதிரி தான் 1 வது எதிரிக்கு பதிலாக தேர்வு எழுதியுள்ளார் என்ற குற்றச்சாட்டைப் பொறுத்து ஆராய்ந்து பார்க்கையில் 2 வது எதிரி இந்த வழக்கில் எவ்வாறு எதிரியாக சேர்க்கப்பட்டார் என்று அரசு தரப்பிலிருந்து எவ்வித சாட்சியமும் சான்று ஆவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. 2 வது எதிரி அடையாளப்படுத்துவதற்காக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.6, மகேஷ் என்பவர், நான் வெள்ளையாம்மாளில்புரத்தில் வசிக்கிறேன். நான் திருப்பூரில் தனியார்பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் மற்றும் அ.சா.8

சேகர் என்பவர், தனது முதல் விசாரணையில் நான் விவசாயம் செய்து வருகிறேன். 2 வது எதிரியை எனக்கு தெரியாது. நான் அவரைப் பார்த்ததில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு தெரியாது என்று தான் நான் சொன்னேன் எனக் கூறி அரசு தரப்பு வழக்குக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். எனவே, 2 வது எதிரி மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பிலிருந்து சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

(x) 3 வது எதிரி இந்த வழக்கில். 3 வது எதிரி KTC Tutorial என்ற பெயரில் Tutorial College நடத்தி வந்தார் என்றும், அவர் மூலம் 1 வது எதிரி 2003 தேர்வில் ஆள்மாறட்டம் செய்துள்ளார் என்று அரசு தரப்பில் வழக்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி 3 வது எதிரி Tutorial College நடத்தி வந்தார் என்ற பொருண்மையை அரசு தரப்பு நிரூபித்துள்ளதா எனப் பார்க்கையில், மேற்படி பொருண்மையை நிரூபிக்க அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.7 தனது முதல் விசாரணையில், நான் சின்னமனூரில் குடியிருக்கிறேன். நான் ஓட்டுனராக தொழில் செய்து வருகிறேன். 3 ம் எதிரியை எனக்கு தெரியும். 3 ம் எதிரி சின்னமனூர் காயத்திரி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். எனக்கு சொந்தமான வீட்டில் 3 ம் எதிரி வாடகைக்கு குடியிருந்து வந்தார். போலிசார் என்னை விசாரித்தார். எனவே, மேற்படி சாட்சியத்திலிருந்து 3 வது எதிரி உண்மையிலேயே Tutorial College நடத்தி வந்தார் என்ற பொருண்மையை அரசு தரப்பில் நிரூபிக்க தவறிவிட்டது.

(xi) மேலும் இவ்வழக்கில் அ.சா.1 குறித்து எந்த தேதியில் தனக்கு தெரிய வந்தது என்று தனது புகாரிலும் முதல் விசாரணையிலும் குறிப்பாக சொல்லவில்லை. புலன் விசாரணை அதிகாரி தனது புலன் விசாரணையில் அதுபற்றி விசாரித்து வாக்குமூலமும் தாக்கல் செய்யவில்லை. மேலும் அ.சா.1 கொடுத்த புகார் சுமார் 7 மாதம் காலம் தாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 7 மாதம் காலதாமதத்திற்கான காரணங்களை புலன் விசாரணை அதிகாரி முதல் தகவல் அறிக்கையிலும் தனது முதல் விசாரணையிலும் தெளிவுப்பட எடுத்துக் கூறவில்லை. மேலும் புலன் விசாரணை அதிகாரி அ.சா.1 சரியாக விசாரணை செய்து அனைத்து

ஆவணங்களையும் கைப்பற்றி இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்பது புலனாகிறது.

10) இவை அனைத்தையும் வைத்து பார்க்கும்போது, 1 வது எதிரி 2 வது எதிரி மூலம் ஆள்மாறட்டம் செய்து இறந்து போன 3 வது எதிரியின் உதவியுடன் தேர்வு எழுதியுள்ளார் என்ற குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பு சாட்சியங்கள் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

11) இந்த வழக்கு விசாரணையின் போது எதிரிகள் நீதிமன்ற பிணையில் இருந்துள்ளார். எனவே எதிரிகள் மீதான பிணைமுறி பத்திரம் இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் அல்லது மேல்முறையீடு எதுவும் நிலுவையில் இருப்பின் அது முடிந்த பின்னர் ரத்து செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

12) இறுதியாக, இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து, சட்டபிரிவுகள் 416, 419, 464, 471, 420 IPC-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

3 வது எதிரி வழக்கு நிலுவையில் இருக்கும்போதே இறந்துவிட்டதால் அவர்மீதான குற்றம் அற்றுபோய்விட்டது.

இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே தனிப்பட்ட உத்தரவு எதுவும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் திருத்தப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

AASAY MARUDHU P
Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.03.13 16:24:05 +0530

**நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),**

**தேனி.**

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | – மோகன். | புகார்தாரர். |
| 2. | அ.சா.2 | – சோமசுந்தரபாண்டியன். | தலைமை ஆசிரியர், இந்து நடுநிலைப்பள்ளி |
| 3. | அ.சா.3 | – தியாகராஜன். | தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, கோட்டூர் |
| 4. | அ.சா.4 | – குணசேகரன். | கிராம நிர்வாக உதவியாளர், கிராம நிர்வாக அலுவலகம், சின்னமனூர் |
| 5. | அ.சா.5 | – கே.ஜே.வர்கீஸ். | தலைமை ஆசிரியர் & தாளாளர், புனித செயின்ட் மேரீஸ் மேல்நிலைப் பள்ளி, A.N. மங்கலம், சேலம் |
| 6. | அ.சா.6 | – மகேஷ் (எ) மகேஷ்வரன். | ஒப்புதல் வாக்குமூலம் சாட்சி |
| 7. | அ.சா.7 | – சிவகுமார். | ஒப்புதல் வாக்குமூலம் சாட்சி |
| 8. | அ.சா.8 | – சேகர். | ஒப்புதல் வாக்குமூலம் சாட்சி |
| 9. | அ.சா.9 | – அங்குசாமி. | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| 10. | அ.சா.10 | – சேது. | காவல் ஆய்வாளர் |

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | – | அ.சா.1 கொடுத்த புகார். |
| 2. | அ.சா.ஆ.2 | – | 25.06.2003 ம் தேதியிட்ட சேலம் மாவட்டம் A.N. **மங்கலம்** புனித மேரிஸ் மேல் நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கடிதம். |
| 3. | அ.சா.ஆ.3 | – | 21.01.2004 ம் தேதியிட்ட எதிரியின் புகைப்படத்துடன் கூடிய சீலையம்பட்டி இந்து தலைமை ஆசிரியர் அவர்களின் |

கடிதம்.

| | | | |
|---|---|---|---|
| 4. | அ.சா.ஆ.4 | – | 08.01.2003 ம் தேதியிட்ட மார்ச் 2003 ம் வருடத்திற்குரிய பணித்தேர்வு எழுதுவதற்கான புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பம். |
| 5. | அ.சா.ஆ.5 | – | 12.08.2003 ம் தேதியிட்ட செப்டம்பர் 2003 ம் வருடத்திற்குரிய எதிரியின் புகைப்படம் ஒட்டப்பட்ட தனித்தேர்வு எழுதுவதற்குரிய நுழைவுச்சீட்டு. |
| 6. | அ.சா.ஆ.6 | – | 12.08.2003 ம் தேதியிட்ட கோட்டூர் அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரால் சான்றொப்பம் செய்யப்பட்டது. |
| 7. | அ.சா.ஆ.7 | – | சேலம் புனித மேரிஸ் தலைமை ஆசிரியரால் சான்றொப்பம் செய்யப்பட்ட எதிரியின் 8 ம் வகுப்பு வரையிலான ரெக்காட்ஸ் சீட். |
| 8. | அ.சா.ஆ.8 | – | கோட்டூர் ஆசிரியரால் சான்றொப்பம் செய்யப்பட்ட எதிரியின் 8 ம் வகுப்பு வரையிலான ரெக்காட்ஸ் சீட். |
| 9. | அ.சா.ஆ.9 | – | 1 ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம். |
| 10. | அ.சா.ஆ.10 | – | முதல் தகவல் அறிக்கை. |
| 11. | அ.சா.ஆ.11 | – | மார்ச் 2003 ம் வருடத்திய எதிரியின் மதிப்பெண் பட்டியல் No.0435168. |
| 12. | அ.சா.ஆ.12 | – | செப்டம்பர் 2003 ம் வருடத்திய எதிரியின் மதிப்பெண் பட்டியல் No. 0867776. |

<u>அரசுத் தரப்பு சான்று பொருள்:</u> இல்லை.

<u>எதிரிகள் தரப்பு சாட்சி:</u> இல்லை.

**<u>சான்றாவணம் மற்றும் சான்று பொருள்:</u>** இல்லை.

AASAY MARUDHU P Digitally signed by AASAY MARUDHU P Date: 2026.03.13 16:24:20 +0530

**நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),**
**தேனி.**

**<u>குறிப்பு :</u>**

1. வழக்கின் முடிவு காவல்துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.
2. எந்த சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையிலிருந்தார்கள்.
4. இவ்வழக்கில் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.